**களனி ஆற்றிற்கு மேலாக பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2019**

---------------------------------------------------------------------------------------------------

களனி ஆற்றிற்கு மேலாக பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மார்ச் 28 ஆம் திகதிய எஸ்எல்பி - III ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தயாரித்து மற்றும் வழங்கப்பட்ட 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பாராளுமன்றித்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்திற்கான நிறைவேற்றல் முகவராக முன்னர் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சும் உள்ளது மற்றும் அமுலாக்கல் முகவராக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளது. கொழும்பு நகரத்தில் போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்குப் பங்களிப்பதற்காக களனி ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலத்தை உயர் இயக்க இணைப்பாக நிர்மாணிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைத் தணித்தல் மற்றும் நீக்குதல் இச்செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டமானது, உருக்கு பாலம் பிரிவு மற்றும் மிகை அளவான பிரிவு என இரண்டு ஒப்பந்த பொதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,313 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 41,429 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 46,755 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 35,020 மில்லியன் தொகையினை நிதியீட்டம் செய்வதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இணங்கியிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 8,558 மில்லியனை நிதியீட்டம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. செயற்திட்டத்தின் இரண்டு பொதிகளும் அதன் செயற்பாடுகளினை 2014 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 27 மற்றும் 2021 மார்ச் 28 இல் முறையே பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வு காலப்பகுதியில் என்னால் அடையாளம் காணப்படுகின்ற ஏனைய விடயங்களில், உள்ளக கட்டுப்பாட்டின் ஏதாவது குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், தொடர்பாக அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களுடன் நான் தொடர்பு கொண்டேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இலக்கம் 22 இலிருந்து அறவிடப்பட்ட ரூபா. 66.60 மில்லியன் தொகை பிடி பணம் தனித்தனியாக காட்டப்படவில்லை. மற்றும் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்-01 இன் 80 வது பந்தியின் படி, தீர்வு செய்யப்பட வேண்டிய காலம் கருத்தில் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிநிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்பின் கீழ் மொத்த இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் பெறுமதி ரூபா. 2,051,14 மில்லியன் கணக்கிடப்பட்டுள்ளது. | ரூபா. 66.60 மில்லியன் ஆல் பொறுப்பு குறைத்துக்காட்டப் பட்டுள்ளது மற்றும் செயற்திட்டத்தின் நிதிகூற்றுக்களில் ஒவ்வொரு பொறுப்புக்களும் தனித்தனியாக காட்டப்படவில்லை. | பொறியலாளரின் சான்றிதழின் அடிப்படையில், 2019 திசெம்பர் இன் ஐபிசி எண் 22 இன் பெறுமதி பொறியியலாளரால் சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா. 66.6 மில்லியன் பிடிபணம் உட்பட ரூபா. 658.04 மில்லியனாக இருந்தது. பொறியியலாளர் கொடுப்பனவை சான்றுப்படுத்திய பின் பிடிபணம் ஒரு பொறுப்பாக கருதப்பட வேண்டும். இந்த ஐபிசி 2019 ஆம் ஆண்டின் | மீளாய்வாண்டின் இறுதியில் பொறியியலாளரின் சான்றிதழ் இல்லாத போது கூட தொழில்முறை தீர்ப்பின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

நிதிக்கூற்றுக்கள் பொறியியலாளரால் முடிவுறுத்துவதற்கு முன் சான்றுப் படுத்தப்பட்டிருந்தது. இது 2019 திசெம்பர் ஐபிசி இற்கான ஏற்பாட்டின் அடிப்படையாக இருந்தது.

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2019 மார்ச் 15 முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2019. | செயற்திட்ட வழிநடத்தல் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். | இணக்கம் மீதான சுற்றறிக்கையின் தேவைப்பாடு | தளத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான கலந்துரையாடலில் அதிக கவனம் செலுத்தப்பட்டதன் விளைவாக பல வழிநடத்தல் குழு கூட்டங்கள் திட்டமிடப்பட்டது. நடத்தப்படவில்லை. | முகாமைத்துவம் முடிந்தவரை சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டச் செயற்பாடுகளின் பௌதீகச் செயல்முன்னேற்றம்

**2019 திசெம்பர் 31 இல்**

| கூறுகள் | செயற்பாடுகள் | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயல்திறன் சதவீதம் | அடையப் பெற்ற செயல்திறன் சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாக்கம் | தாமதங்களுக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| தொகுப்பு I | உருக்கு பாலம் பிரிவு | 68 | 56 | இந்த திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட செயல்திறனை அடைய முடியவில்லை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயல்திறனில் | ஒப்பந்தத்தின் உண்மை செலவு அதிகரிக்கப்படலாம். | தவிர்க்க முடியாத நிலைமை நாட்டில் நிலவியது. |
| தொகுப்பு II | மிகை அளவான பாலம் பிரிவு | 62 | 56 | | | |

இருந்து 12 மற்றும் 6 சதவீதத்தால் விலகியுள்ளது.

| | |
|---|---|
| முகாமைத்துவத்தின் கருத்துரை | தவிர்க்க முடியாத நிலைமை காரணமாக, தொகுப்பு I ஒப்பந்தத்திற்கான ஒப்பந்தக்காரர் வேலையை நிறுத்தி வைத்தார் மற்றும் அவரது வெளிநாட்டு ஊழியர்களில் பெரும்பான்மையானவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இது வேலையின் முன்னேற்றத்தையும் பாதித்தது. தொகுப்பு I ஐப் பொறுத்தவரை நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட உருக்கு கூறுகளின் பெறுமதி மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு ஒப்பந்தத்தின் முன்னேற்றம் கணக்கிடப்படுகின்றது. பிற நாடுகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் கட்டுருவாக்கப்பட்ட உருக்கு கூறுகளின் பெறுமதிகள் பௌதீக ரீதியான முன்னேற்றத்தைக் கணக்கிடும் போது கணக்குகளுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை |
| கணக்காய்வாளரின் பரிந்துரை | செயற்திட்டத்தின் செயல்திறனைக் கண்காணிக்க பிஎம்யு ஆல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் அதற்கேற்ப திட்டத்தின் செயல்திறனைப் பாதிக்கும் காரணிகளைக் கவனத்தில் கொண்டு வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது. |

## 3.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

- செயற்திட்டத்தின் செயல் திட்டம் - 2020 இன் நிதி மூலங்களின் பொழிப்பின்படி, கடன் வழங்கும் முகவராண்மையால் மொத்த ஒதுக்கீடு ரூபா. 49,379.16 மில்லியன் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஒதுக்கீட்டில் 59 சதவீதத்திற்கு சமமான ரூபா. 29,317.11 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடக்கப்பட்ட திகதியிலிருந்து 6 ஆண்டுகள் கழிந்த பின்னர் 31 திசெம்பர் 2019 இல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- தேறிய ஏற்பாடு ரூபா. 197 மில்லியன் தொகையானது அரச பங்களிப்பின் கீழ் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாட்டில் தேறிய செலவு 83 சதவீதத்திற்கு சமமான ரூபா. 164 மில்லியன் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| கல்பராவாவில் ரூபா. 34 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை அணுசக்தி சபையின் மீளமைத்தல் நடவடிக்கைகள் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக 17 யூன் 2015 முதல் நிறுத்தப்பட்டது. அதைத் | ரூபா. 34 மில்லியன் செலவானது வீணான செலவாக கருதப்பட்டது. | தளத்தில் உள்ள அனைத்து கட்டமைப்புக்கள் மற்றும் பொருட்கள், என்ஏஐரிஏ இடம் ஒப்படைக்கப்பட்டதோடு இன்னும் சில பொருட்கள் ஆர்டிஏ | இந்த மீதி பிஎம்யு இன் பத்தகங்களில் தனித்தனியாக பேணப்பட வேண்டும். அத்தோடு செயற்திட்டத்திலிருந்து மாற்றப்பட்ட அதன் சொத்து |

தொடர்ந்து இந்த இடம் தேசிய பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி அதிகாரசபைக்கான புதிய கட்டடம் அமைக்க ஒப்படைக்கப்பட்டது.

இன் கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்பட்டது. இந்த செலவினம் சிக்கனமற்ற செலவாக கருத முடியாது. என்ஏஜரிஏ இந்த பகுதியளவு கட்டப்பட்ட கட்டிடங்களை அவர்களின் எதிர்கால அபிவிருத்தி வேலைகளுக்காக பயன்படுத்தும்.

பெறுமதியிலிருந்தான தொகையை ஆர்டிஏ பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.